**S.C.No.207/2021**

**Date : 18.04.2023**

***அ.சா.1 மகேஸ்***

***(*Accused present)**

***மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முந்தைய சாட்சியம் நினைவூட்டலுக்காக படித்து காண்பிக்கப்பட்டு எதிரி தரப்பு கு.வி.***

நான் எம்.ஏ., படித்துள்ளேன். அ.சா.2 எனது தகப்பனார் என்றால் சரிதான். அ.சா.3 என் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். சாட்சி மகேந்திரன் எனது சித்தப்பா ஆவார். அவர் எனக்கு தூரத்து உறவினர் ஆவார். 19.02.2019 அன்று இரவு 09.30 மணியளவில் எனது உறவினரான பச்ச குஞ்சு என்ற குருசாமி வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். நானும், எனது அப்பாவான அ.சா.2, எனது அண்ணான அ.சா.3ம் சென்றோம். எதிரி பைக்கை நிறுத்தியது சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். பைக் நிறுத்தியதில் ஏற்பட்ட வாக்குவாதம் பச்ச குஞ்சுவிற்கு தெரியும் என்றால் சரிதான். பைக் நிறுத்தியது சம்பவம் குறித்து நானும் அ.சா.2, 3ம் சேர்ந்து எதிரியை அந்த இடத்தில் வைத்து தாக்கி காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரி பைக் நிறுத்தியது சம்பந்தமாக ஏற்பட்ட வாக்குவாதத்திற்கு எதிரி மீது புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சின்ன வாக்குவாதம் என்பதால் புகார் அளிக்கவில்லை. வாகனம் நிறுத்தியது சம்பந்தமான பிரச்சனைக்கு நாங்கள் காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்தால், என் மீதும் அ.சா.2, 3மீதும் உள்ள குற்ற விவரம் போலிசாருக்கு தெரியவரும் என்பதால் புகார் அளிக்காமல் இருந்துள்ளோம் என்றால் சரியல்ல. பைக் நிறுத்தியது சம்பவம் நடைபெற்று சுமார் 4 மணி நேரம் கழித்து நள்ளிரவு 01.00 மணியளவில் எங்கள் வீட்டு கதவை தட்டிய நபர் யார் என திறந்து பார்ப்பதற்கு முன்னர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் திறந்து பார்த்த பின்னர் அது ஆஜர் எதிரி என தெரியவந்தது. எங்கள் வீடடில் இருந்து முதலில் அ.சா.2தான் வீட்டை விட்டு வெளியே சென்றார் என்றால் சரிதான். அ.சா.2க்கு பின்னர் நானும், அ.சா.3ம் வெளியில் சென்று எதிரியின் இருசக்கர வாகனம் எங்கள் வீட்டிற்கு அருகில் இருப்பதை பார்த்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியின் வண்டியை பார்க்கவில்லை.

எதிரியின் வாகனம் எங்கள் வீடு அருகே இருந்ததா என்று சரியாக நான் கவனிக்கவில்லை. எங்கள் வீட்டு கதவினை யாரோ ஒருவர் தட்டி ஓடிய பின்னர் நாங்கள் வெளியே வந்து பார்த்த பொழுது எதிரியின் வண்டி இருந்ததால் எதிரி தான் எங்கள் வீட்டு கதவை தட்டி சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், அசா.2, 3ம் சேர்ந்துதான் அரிவாளை வைத்து எதிரியின் வண்டியை சேதப்படுத்தினோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியின் வண்டியை சேதப்படுத்தியை அ.சா.2 தடுத்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.2க்கு ஏற்பட்ட காயத்தினை மையமாக வைத்து எதிரியை பழிவாங்கும் நோக்கில் பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் சேதமடைந்த வண்டியும் நான் சரியாக பார்க்கவில்லை. எனது தகப்பனாருக்கு காயம் இருந்ததால் எதிரியின் வண்டி குறித்து நான் சரியாக பார்க்கவில்லை. அ.சா.2க்கு காயம் ஏற்பட்டவுடன் 108 ஆம்புலன்சிற்கு தகவல் அளிக்கப்பட்டது. நாங்கள் தகவல் சொல்லி சுமார் அரை மணி நேரத்தில் ஆம்புலன்ஸ் எங்கள் வீட்டிற்கு வந்தது. சம்பவ இடத்தில் இருந்து சிவகிரி அரசு மருத்துவமனைககு செல்ல சுமார் அரை மணி நேரம் ஆனது. அ.சா.2யை சிவகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்த பொழுது அ.சா.2க்கு அதிக காயம் உள்ளதால் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். சிவகிரி அரசு மருத்துவமனையில் இருந்து திருநெல்வேலி புறப்படும் பொழுது சுமார் இரவு 02.15 மணி இருக்கும். சாட்சி மகேந்திரன் அ.சா.2யை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து தான் பார்த்தார் என்றால் சரியல்ல. சாட்சி மகேந்திரன் எங்களுடன் சிவகிரி மருத்துவமனை வந்தார். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து தான் நான் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. சிவகிரி அரசு மருத்துவமனையில் வைத்தே புகார் அளித்தேன். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரணை தான் செய்தனர். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் வைத்து போலிசாரிடம் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.2 எனது தகப்பனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**